DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.378/13

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name கிருஷ்ணமூர்த்தி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.10.2019

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தேனியில் குடியிருந்து சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். அசா1 என் சித்தப்பா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். மற்ற எதிரிகளை தெரியும். 2000ம் வருடம் 2.குழி 28 செண்ட் விவசாய நிலத்தை சந்திரகலா, சரஸ்மணி அவர்களிடம் இருந்து பொன்ராஜ், சீனிவாசன், ராஜசேகர் , நான் ஆகியோர்கள் கிரயமாக வாங்கினோம். இந்த இடத்தில் நாங்கள் விவசாயம் செய்துக்கொண்டிருந்தோம். 2001ல் மீராபாய் ,முருகேசன் இந்த இடம் எங்களுக்கு தான் சொந்தம் என்று பிரச்சனை செய்தார்கள். இது சம்மந்தமாக நாங்கள் பெரியகுளம் நீதிமன்றத்தில் ஒ.எஸ்288-2001 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து தடை உத்தரவு பெற்றோம். மேற்படி உத்தரவிற்கு பிறகு பெரியகுளம் வட்டாட்சியரிடம் மீராபாய் ,முருகேசனும் பொய்யான தகவலை கொடுத்து அவர்கள் பெயருக்கு பட்டா வாங்கினார்கள். இது பற்றி நாங்கள் கோட்டாட்சியரிடம் புகார் தெரிவித்தோம். அவர் விசாரணை செய்துவிட்டு எதிரிகள் பெயரில் வழங்கிய பட்டாவை ரத்து செய்துவிட்டார். அவ்வுத்தரவின் மீது எதிரிகள் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்தார்கள். அவர் விசாரணை செய்துவிட்டு மேல்முறையீட்டை தள்ளுபடி செய்துவிட்டார். அதன்பிறகு நாங்கள் வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்தோம். அப்போது தான் மேற்படி நிலம் மீராபாய் பெயரில் பத்திரம் எழுதி பதிவு செய்யபட்டிருந்த தெரிந்தது. 1977ல் ஏற்பட்ட பதிவு செய்யபடாத ஆவணத்தின் பேரில் 1996ல் மீராபாய் பெயருக்கு தானசெட்டில் மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள். 1998ல் மீராபாய் மதுரையைசேர்ந்த கலாவதி என்பவருக்கு 30செண்ட் நிலத்தை கிரயம் செய்து கொடுத்துள்ளார். மேலும் 30செண்ட் நிலத்தை ராமபத்திரநாயுடு என்பவருக்கு மீராபாய் கிரய ஒப்பந்தம் செய்துக்கொடுத்துள்ளார். மீதமுள்ள 1.70ஏக்கர் நிலத்தை மீராபாய் அவரின் கணவர் முருகேசன் பெயருக்கு தானம் எழுதி வைத்துள்ளார். முருகேசன் தேனியை சேர்ந்த மனோகரன் என்பவருக்கு கிரய ஒப்பந்தம் செய்துக்கொடுத்துள்ளார். ஆனால் சிவில் வழக்கு இருப்பதை தெரிந்துக்கொண்டு மனோகரன் கிரய ஒப்பந்த்தை ரத்து செய்துவிட்டார். இது சம்மந்தமாக அசா1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். புகார் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை: இல்லை